# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம்

---

**[2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2025, யூலை மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா. 20.00** **தபாற் செலவு : ரூபா. 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2025 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம்**

[2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 19/2025

## 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக: -

**1.** (1) இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

**2.** இரண்டாயிரத்துப் பதினாறாமாண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.-

2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு மே 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு மே 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2025 மார்ச் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "2016 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2016 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும் 2025 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின், சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.